உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

# வருமான வரி செலுத்துனர்களுக்கான அறிவித்தல்

## வரி மதிப்பீட்டாண்டு 2016/17

**வரி மதிப்பீட்டாண்டு 2016/2017 இற்கான தங்களின் வருமான வரி விபரத்திரட்டினைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி,**

## 2017, நவம்பர் 30

**என்பதனை தங்களுக்கு நினைவூட்டுகின்றோம்.**

கூட்டிணைவு வருமானவரி (CIT), தனிநபர் வருமான வரி (IIT) மற்றும் பங்குடமை வருமான வரி (PIT) என்பவை தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வரி விபரத்திரட்டுக்களினைச் சமர்ப்பிக்குகையில் பின்வரும் விடயங்களினையும் கவனத்தில் கொள்ளுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

- ➢ உரிய விபரத்திரட்டுக்களுடன் வழங்கப்படும் வழிகாட்டுதல்களினைக் கவனமாக வாசிக்கவும்
- ➢ குறித்த வரி செலுத்துனருக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்படும் விபரத்திரட்டுப் படிவங்கள் மற்றும் அட்டவணைகளினை மட்டும் பயன்படுத்துக. (பெயர், வரி செலுத்துனர் அடையாள இலக்கம் மற்றும் அச்சடிக்கப்பட்ட சலாகைக் குறியீடு). போட்டோப் பிரதிகளினைப் பயன்படுத்த வேண்டாம் அத்துடன் சலாகைக்க குறியீட்டுக்கு மேல் எதனையும் எழுத வேண்டாம்.
- ➢ அதி வேகத்தில் ஆவணங்கள் ஸகான் செய்யப்படுவதால் அழிவடைந்த அல்லது சேதமடைந்த படிவங்கள் மற்றும் ஆவணங்கள் அந்த நடவடிக்கைக்குப் பயனற்றவையாக இருக்கும் என்பதால் அத்தகைய ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- ➢ படிவங்களினைக் (விபரத்திரட்டுக்கள், அட்டவணகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக் கூற்றுக்கள் போன்றவை) கவனமாக நிரப்புவதுடன் பொருத்தமற்றவை காணப்படுமிடத்து ''பொருத்தமற்றவை'' ("N/A") எனக் குறிப்பிடுக. இது குறித்த நிரல்களினை படிவங்கள் / அட்டவணைகளில் வெற்றிடமாக விட வேண்டாம்.
- ➢ உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 108 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, வதிவினைக் கொண்டுள்ள தனிநபர்களினைப் பொறுத்த வரையில் தேசிய அடையாள அட்டை இலக்கம், வதிவல்லா கம்பனிகளினைப் பொறுத்த வரையில் கடவுச் சீட்டு இலக்கம் மற்றும் கம்பனிகள், பங்குடமைகள் மற்றும் ஏனைய ஆட்களினைக் கொண்டுள்ள அமைப்புக்கள் என்பனவற்றினைப் பொறுத்த வரையில் வியாபாரப் பதிவுச் சான்றிதழ் இலக்கம் என்பன சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- ➢ வரி விபரத்திரட்டில் வரி செலுத்துனர் / முன்னுரிமைப் பங்காளர் / முதன்மை அலுவலர் கையொப்பமிடுவது கட்டாயமானதாகும்.
- ➢ முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விபரத்திரட்டுடன் அனைத்துப் படிவங்களும் துணை ஆவணங்களும் சரியாக இணைக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்தவும்.
- ➢ வர்த்தமானியினால் (**www.ird.gov.ik** இணையத்தளத்தில் உள்ளது) விதித்துரைக்கப் பட்டதும் பிரிவு 107 இனால் தேவைப்படுத்தப்பட்டவாறானதுமான அனைத்து ஆவணங்கள், அட்டவணைகள் என்பன ஏற்புடையதாயின், அவை சரியான முறையில் இணைக்கப்பட்டுள்ளனவா எனபதனையும் உறுதிப்படுத்திக் கொள்க
- ➢ கோரப்பட்ட ஏதேனும் வரி வரவுடன் தொடர்புடைய ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்க. (உதாரணம்: நிறுத்தி வைத்தல் வரி சான்றிதழ்கள் போன்றவை)
- ➢ வரிக் கொடுப்பனவுகள் தொடர்பில் கொடுப்பனவு மேற்கொண்ட சிட்டைகளின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்க.
- ➢ உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு முன்பாக தங்களின் வரி விபரத்திரட்டு மற்றும் துணை ஆவணங்கள் என்பன உரிய முறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்க.
- ➢ RAMIS இனால் ஆவணங்களினைப் பெற்றுக் கொண்டமைக்கான உறுதிச்சீட்டுக்களினை வழங்குகையில், கணனி முறைமையில் ஏற்படும் நெருக்கடி காரணமாக தங்களுக்கு ஏதேனும் அசௌ-கரியம் / நெருக்கடிகள் ஏற்படலாம். அதனைத் தவிர்க்கும் பொருட்டு, வரி விபரத்திரட்டுக்களினைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் தருணம் வரையில் காத்திருக்க வேண்டாம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள இணையத் தளத்தின் **(www.ird.gov.lk)** இணையத்தளத்திலுள்ள இ-சேவைகளின் கீழ் உள்ள மின் கோவையிடல் வசதியினைப் பயன்படுத்திக் கொள்ளுவது தங்களுக்கு சௌகரியமானதாகும்.

வருமான வரி விபரத்திரட்டுக்கள் வரி செலுத்துனர்களுக்கு தபால் மூலம் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் ஏதேனும் முகவரி மாற்றம் இருப்பின் அல்லது விபரத்திரட்டினைத் தாங்கள் பெற்றிருக்காவிடின், தாங்கள் அது குறித்து உள்நாட்டு இறைவரித் திணைக்கள தலைமையகத்தின் வியாபார ஆலோசனைப் பிரிவுக்கு அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு அறியத்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

1. வரி செலுத்துனர் தமது வருமான வரி விபரத்திரட்டினை (தனிநபர், கம்பனி, பங்குடமை அல்லது ஏனைய கூட்டிணைவு அமைப்புக்கள்) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பின்வரும் அலுவலகங்களில் சமர்ப்பிக்க முடியும்.
   - ❖ **தலைமை அலுவலர்கள்**
   - ❖ **அனைத்துப் பிராந்திய அலுவலகங்கள்**
   - ❖ **ஜாவத்தை நகர அலுவலகம்**
   - ❖ **நவம் மாவத்தை அலுவலகம்.**
2. வரி விபரத்திரட்டு, அட்டவணைகள் மற்றும் வழிகாட்டுதல்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பின்வரும் திருத்தங்களையும் கவனத்தில் கொள்ளவும்.

**அ. அட்டவணை 11 (தனிநபர்களின் வருமான வரி விபரத்திரட்டுக்கான அட்டவணை ̊ சிங்களம், ஆங்கலம் மற்றும் தமிழ்)**

2012/2013 காலப்பகுதியிலிருந்து முன்கொண்டு செல்லப்பட்ட பொருளாதார சேவைக் கட்டண வரவு 2013/2014 காலப்பகுதிக்கு கொண்டு முன் கொண்டு செல்லப்பட்ட தொகையுடன் சேர்க்கப்படுதல் வேண்டும் அத்துடன் இந்த மொத்தத் தொகையானது விபரத்திரட்டின் கூடு 550.1 இல் பதியப்படுதலும் வேண்டும்.

| முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டு செல்லப்பட்ட பொ.சே.க வரவு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2012/2013 &2013/2014 | 550.1 | 2014/2015 | 550.2 | 2015/2016 | 550.3 | மொத்தம் (550.1+550.2+550.3) | 551 |
| | | | | | | | |

**ஆ. அட்டவணை 10 (தனிநபர் வருமான வரி விபரத்திரட்டுக்கான அட்டவணை - சிங்களம்)**

| | |
|---|---|
| **මුළු එකතුව**<br>(306+307+312+320+324+330+334+336+342+348+354+358+362+366+369+370+380) හා මෙම අගය වාර්තාවේ 300 වන කොටුවට ඇතුළත් කරන්න) සටහන 'A' අක්ෂරය සමඟ දක්වා ඇති කොටුවල මුදල් ප්‍රමාණය (eg:- 306A, 312A, 324A & etc.) මගින් ඉදිරි තක්සේරු වර්ෂය සඳහා ඉදිරියට ගෙනගිය මුදල් ප්‍රමාණය නියෝජනය වන බැවින් කරුණාකර මුළු එකතුවට නොගන්න. | 390 |

**இ. பக்கம் 26 (விரி விபரத்திரட்டுக்கள் மற்றும் அட்டவணைகளினை நிரப்புவதற்கான வழிகாட்டி – தனிநபர் - ஆங்கிலம்)**

பின்வரும் திருத்தங்கள் 26 ஆம் பக்கத்தில் பின்வருமாறு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்:

**அட்டவணை 11 இன் கூடு 585 இலுள்ள மொத்தக் கூட்டுத் தொகை விபரத்திரட்டின் கூடு 540 இல் பதியப்படுதல் வேண்டும்**

அனைத்து வரி விபரத்திரட்டுக்கள், அட்டவணைகள் மற்றும் வழிகாட்டிகள் என்பன, தங்களின் பார்வைக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்கள இணையத்தளத்தில் உள்ளன.

**மேலதிக விளக்கங்களுக்கு, தயவு செய்து 1944 எனும் இலக்கத்தினை அழைப்பதனூடாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அழைப்பு நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

**உள்நாட்டு இறைவரி இணையத்தளம் : - www.ird.gov.lk**

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

**வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக**